




admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI www.dhinakani.com

காலை நாளிதழ்









Vol: 02 | Issue: 320 | 4 Pages | 15.6.2025 | Sunday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825


மலர்: 02 | இதழ்: 320 | 4 பக்கங்கள் | 15.6.2025 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825

**எனைத்தானும்எஞ்ஞான்றும்யார்க்கும்மனத்தானாம்**
**மாணாசெய் யாமை தலை**

**விளக்கம்:**
**எவ்வளவு சிறியதாயினும் எக்காலத்திலும் எவரிடத்திலும் மனதால் எண்ணிஉண்டாகின்றதுன்பச்செயலைச் செய்யாதிருத்தலே நல்லது.**

## மருத்துவ அவசர நிலை... எண்ணெய் கப்பலில் தவித்த இந்தியரை விரைந்து சென்று காப்பாற்றிய கடற்படை



புதுடெல்லி: ஜூன் 15

சிங்கப்பூர் கொடியுடன் கூடிய ஈகிள் வெராக்ரூஸ் என்ற எண்ணெய் கப்பல் இன்று இந்திய பெருங்கடல் பகுதியில் வந்தபோது, அந்த கப்பலில் இருந்த ஒரு ஊழியருக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்டுள்ளது. அவரை உடனடியாக சிகிச்சைக்கு அனுப்ப வேண்டிய நிலை ஏற்பட்டது.


மருத்துவஅவசரநிலைகுறித்தசெய்திஇந்தியகடற்படைக்குகிடைத்தது. இதையடுத்து கொச்சியில் உள்ள ஐ.என்.எஸ். கருடா கப்பலில் இருந்து இந்திய கடற்படையின் ஹெலிகாப்டர் உடனடியாக அனுப்பி வைக்கப்பட்டது. மேலும், நோயாளியை அழைத்து வருவதற்கு உதவி செய்வதற்காக ஐ.என்.எஸ். சாரதா கப்பலும் அங்கு திருப்பி விடப்பட்டது.

ஹெலிகாப்டர், எண்ணெய்க் கப்பலை நெருங்கியபோது அங்கு மோசமானவானிலைநிலவியது.மழைபெய்துகொணடிருந்தது.இதனால் அந்த கப்பலில் தரையிறங்க முடியவில்லை. எனினும் மீட்புக் குழுவினர் சாமர்த்தியமாக செயல்பட்டு, வின்ச் மூலம் அந்த நோயாளியை கப்பலில் இருந்து வெளியேற்றினர்.

41 வயதான அந்த ஊழியர் இந்தியாவைச் சேர்ந்தவர். அவர் கப்பலில் இருந்து வெற்றிகரமாக மீட்கப்பட்டு, ஐ.என்.எஸ். கருடாவை வந்தடைந்ததும், மேல்சிகிச்சைக்காக கொச்சியில் உள்ள மருத்துவமனைக்கு பாதுகாப்பாக அனுப்பி வைக்கப்பட்டார்.

இத்தகவலை இந்திய கடற்படை தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டு, மீட்பு பணி தொடர்பான வீடியோவையும் ஷேர் செய்துள்ளது.

## ஈரான், இஸ்ரேலில் வசிக்கும் இந்தியர்கள் பாதுகாப்பாக இருக்க அறிவுறுத்தல்



டெஹ்ரான், ஜூன் 15

ஈரான் மீது இஸ்ரேல் அதிரடி தாக்குதலை தொடுத்து உள்ளது. இதற்கு ஈரானும் பதிலடி கொடுத்து வருவதால் மத்திய கிழக்கில் பெரும் போர் பதற்றம் நிலவி வருகிறது. இந்த நிலையில் ஈரானில் வசிக்கும் இந்தியர்களுக்கு தலைநகர் டெஹ்ரானில் உள்ள இந்திய தூதரகம் எச்சரிக்கை விடுத்து உள்ளது.

அதன்படி, 'நடப்பு சூழலை கருத்தில் கொண்டு ஈரானில் வாழும் இந்தியர்கள் மற்றும் இந்திய வம்சாவளியினர் விழிப்புடன் இருக்க வேண்டும். தேவையற்ற பயணங்களை தவிர்த்து, பாதுகாப்பாக இருக்க வேண்டும். உள்ளூர் அதிகாரிகளின் அறிவுறுத்தலை கடைப்பிடிக்க வேண்டும்' என கூறியுள்ளது.

இதைப்போல இஸ்ரேலில் வசித்து வரும் இந்தியர்களும் பாதுகாப்பு வழிமுறைகளை பின்பற்றி எச்சரிக்கையுடன் இருக்குமாறு ஜெருசலேமில் உள்ள இந்திய தூதரகம் கேட்டுக்கொண்டு உள்ளது.

## உக்ரைனில் மேலும் ஒரு கிராமத்தை கைப்பற்றிய ரஷியா



மாஸ்கோ, ஜூன் 15

உலகின் மிகப்பெரிய ராணுவ கூட்டமைப்பான நேட்டோவில் இணைய உக்ரைன் முயன்று வருகிறது. இதனால் தங்களது நாட்டின் பாதுகாப்புக்குஅச்சுறுத்தல் ஏற்படும் என ரஷியா இதற்கு எதிர்ப்பு தெரிவித்தது. அதனை பொருட்படுத்தாமல் உக்ரைன் இணைய முயன்றதால் 2022ம் ஆண்டு ரஷியா போர் தொடுத்தது. 3 ஆண்டுகளுக்கு மேலாக இந்த போர் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இதில் உக்ரைனுக்கு ஆதரவாக அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் பொருளாதாரஉதவியைவழங்கின. எனினும்உக்ரைனின்பலநகரங்களைக் கைப்பற்றி தொடக்கம் முதல் ரஷியாவின் கையே ஓங்கி உள்ளது. எனவே போரை நிறுத்துவது தொடர்பான ஆலோசனை நடத்த ஐரோப்பிய நாடுகளின் தலைவர்கள் ஒன்றுகூடினர். அதன்பிறகு அவர்கள் வெளியிட்ட கூட்டறிக்கையில், போரை நிறுத்தாவிட்டால் ரஷியா மீதான பொருளாதார தடை விரிவுபடுத்தப்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

இதனையடுத்து உக்ரைனுடன் பேச்சுவார்த்தை நடத்த ரஷிய அதிபர் புதின் ஒப்புக்கொண்டார். அதன்படி துருக்கியின் இஸ்தான்புல் நகரில் இரு நாடுகளின் உயர்மட்ட அதிகாரிகள் சந்தித்து பேசினர். அப்போது பேச்சுவார்த்தைமுடியும்வரைதற்காலிகபோர்நிறுத்தத்தைஅறிவிக்குமாறு உக்ரைன் வலியுறுத்தியது. ஆனால் ரஷிய அதிபர் புதின் அதனை நிராகரித்தார்.

ஏற்கனவே உக்ரைனின் பல நகரங்களைக் கைப்பற்றி உள்ள நிலையில் தாக்குதல் மேலும் தீவிரப்படுத்தப்பட்டது. இதில் உக்ரைனின் வடகிழக்கு பிராந்தியமான சுமியில் உள்ள யப்லுனிவ்கா கிராமத்தை கைப்பற்றியதாக ரஷிய பாதுகாப்பு அமைச்சகம் அறிவித்துள்ளது.

# பிரதமரின் திட்டத்துக்கு அதிகம் படியளப்பது மாநில அரசுதான்: முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின்



சென்னை, ஜூன் 15

முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டு இருப்பதாவது;

பிரதமர் வீடு வழங்கும் திட்டம் (PMAY), பிரதமர் மீன்வளத் திட்டம் (PMMSY), உயிர்நீர் (Jaljeevan) எனப் பிரதமரின் பெயரையும் ஸ்டிக்கரில் பிரதமரின் முகத்தையும் தாங்கிச் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கெல்லாம் அவர்களைக் காட்டிலும் அதிகமாகப் படியளப்பது மாநில அரசுதான்!

படையப்பா படக் 'காமெடி' போல "மாப்பிள்ளை அவர்தான், ஆனால் அவர் போட்டிருக்கும் சட்டை என்னுடையது" எனச் சேலம் அரசு விழாவில் பேசியிருந்தேன். பேசினேன் என்பதைவிட பேச வேண்டிய நிலைக்கு உள்துறை மந்திரியின் அடிப்படையற்ற குற்றச்சாட்டால் தள்ளப்பட்டேன் என்றுதான் கூறவேண்டும்.

அது நாளிதழில் செய்தியாகி, தரவுகளோடு விவரிக்கப்பட்டுள்ளது.

இனியாவது, கண்ணாடி வீட்டில் இருந்துகொண்டு கல்லெறியும் பழக்கத்தை மத்திய பா.ஜ.க. அரசு மாற்றிக்கொள்ள வேண்டும்."

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## கீழடிக்கு உலகளாவிய குரலை கொடுத்தது பாஜக : தமிழிசை சவுந்தரராஜன்



சென்னை, ஜூன் 15

பாஜக மூத்த தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டு இருப்பதாவது;

"தமிழக முதல்வர்நமது தமிழ் சகோதர சகோதரிகளை உணர்ச்சிவசப்பட்டு தவறாக வழிநடத்துகிறார். உண்மை என்னவென்றால்,

மோடி ஆட்சிக் காலத்தில் தான் கீழடி முழு தேசிய கவனத்தைப் பெற்றது. கீழடிக்கு உலகளாவிய குரலை கொடுத்தது. பாஜக உண்மையான வேலை செய்கிறது. பனை ஓலைச்சுவடிகளை டிஜிட்டல் மயமாக்குவது முதல் சங்க கால ஆய்வுகளைத் தொடங்குவது வரை.. பாஜக தமிழ் பாரம்பரியத்தை கண்ணியத்துடன் பாதுகாக்கிறது.. "தமிழை அதன் ஒளிரும் கிரீடமாகக்" கொண்டு இந்திய நாகரிகத்தின் ஒற்றுமையை நாங்கள் நம்புகிறோம்.

தேசிய நிகழ்வுகளில் மோடிஜிதமிழில்பேசினார்.. நம் தாய் தமிழுக்கு இவ்வளவு உலகளாவிய குரலை வேறு எந்த பிரதமரும் கொடுத்ததில்லை. மதுரையில் சங்க கால அருங்காட்சியகத்திற்கு பிரதமர் அடிக்கல் நாட்டினார். கீழடி நமது தமிழின் பெருமை மற்றும் நாட்டின் பெருமை. அதை தேசிய அளவிலான புகழுக்கு அதை எடுத்துச் சென்றது பாஜக அரசுதான்."

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## வக்பு திருத்த சட்டத்திற்கு எதிராக திருச்சியில் வி.சி.க. பிரம்மாண்ட பேரணி



திருச்சி, ஜூன் 15

வக்ஃபு திருத்தச் சட்டத்திற்கு எதிராக திருச்சியில் விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் பிரம்மாண்ட எழுச்சிப் பேரணி நடைபெற்றது. திருச்சி டி.வி.எஸ். டோல்கேட் பகுதியில் தொடங்கி, சுமார் மூன்று கிலோ மீட்டர் தூரத்திற்கு பேரணி நடைபெற்றது. இதனை முன்னிட்டு, வழிநெடுகிலும் கட்சிக் கொடிகளும், பிரம்மாண்ட பேனர்களும் அமைக்கப்பட்டிருந்தன.

முன்னதாக பேரணி தொடர்பாக திருமாவளவன் நடத்திய ஆலோசனை கூட்டத்தில், வி.சி.க. துணைப் பொதுச் செயலாளரும், திருப்போரூர் சட்டமன்ற உறுப்பினருமான எஸ்.எஸ் பாலாஜி உள்ளிட்ட கட்சி மேலிட பொறுப்பாளர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகள் பங்கேற்றனர்.

பேரணியின்போது வி.சி.க. தலைவர் திருமாவளவன் திறந்த வாகனத்தின் மீது பயணித்தார். அப்போது அவர் தொண்டர்களுடன் செல்பி எடுத்துக் கொண்டார். வி.சி.க துணைப் பொதுச் செயலாளர்கள் எஸ்.எஸ்.பாலாஜி, வன்னியரசு உள்ளிட்டோர் களப்பணியில் ஈடுபட்டனர்.

## நீட் தேர்வில் வெற்றி பெற்றுள்ள மாணவ, மாணவியர் அனைவருக்கும் வாழ்த்துகள் அண்ணாமலை



சென்னை, ஜூன்15

தமிழக பா.ஜ.க. முன்னாள் தலைவர் அண்ணாமலை தனது எக்ஸ் வலைதளத்தில் கூறியிருப்பதாவது:

நீட் தேர்வில், தமிழகத்தில் தேர்வெழுதிய மாணவர்களில், 76,181 மாணவர்கள், தகுதி மதிப்பெண்கள் பெற்றுள்ளதும், முதல் 100 இடங்களில் 6 இடங்களை, தமிழக மாணவர்கள் பிடித்துள்ளதும், மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது.

தேர்வில் வெற்றி பெற்றுள்ள மாணவ, மாணவியர் அனைவருக்கும், வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திமுக உள்ளிட்ட கட்சிகள் மேற்கொண்டு வரும் நீட் தேர்வுக்கெதிரானபொய்பிரசாரங்களைஉடைத்து, ஒவ்வொரு ஆண்டும் தமிழக மாணவர்கள் நீட் தேர்வில் சாதித்துக் கொண்டிருப்பது பெருமைக்குரியது. திமுக அரசு,

இனியாவது தனது பொய் பிரச்சாரங்களை நிறுத்திவிட்டு, அரசு மருத்துவக் கல்லூரிகளின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதில் கவனம் செலுத்த வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## நெல் குவிண்டாலுக்கு ரூ.3,000 ஆக அறிவித்திட வேண்டும்: முதல்அமைச்சரிடம் விவசாயிகள் சங்கம் வலியுறுத்தல்

சென்னை, ஜூன் 15

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் தலைவர் எஸ்.குணசேகரன், பொதுச் செயலாளர் பி.எஸ். மாசிலாமணி ஆகியோர் கூட்டாக விடுத்த அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது;

தமிழக முதல்வர், ஜூன் 12 அன்று மேட்டூர் அணையை திறந்து வைத்தபின். சேலத்தில் நடந்த அரசு விழாவில்....நெல் குவிண்டால் ஒன்றுக்கு சன்ன ரகத்திற்கு ஊக்கத் தொகை ரூ 156 சேர்த்து ரூ. 2545. ஆகவும்..... சாதாரண ரகத்திற்கு ஊக்கத் தொகை ரூ 131 சேர்த்து ரூ.2500 ஆகவும் விலை கொடுக்கப்படும் என கூறியுள்ளார். இந்த அறிவிப்புவிவசாயிகளுக்கு பெரிய ஏமாற்றமாகும்.

2021ஆம் ஆண்டு தேர்தல் வாக்குறுதியாக... ஆட்சிபொறுப்பேற்றவுடன். நெல் விலை ரூ 2500 ஆக உயர்த்தி கொடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். ஆட்சி அமைக்கும் வாய்ப்பை விவசாயிகளும் தன் வாக்குகள் மூலம் நிறைவேற்றினர். ஆனால் சொன்னபடி இதை நிறைவேற்றாமல் 5வது ஆண்டில் இது அறிவிக்கப்பட்டுள்ளது. 2023 ஆண்டு முதல்....ஒன்றிய அரசு இதுவரை கொடுத்திருக்கிற மூன்று ஆண்டுகளின் விலை உயர்வு முதல் ரகத்திற்கு 349 ரூபாய் இரண்டாவது ரகத்திற்கு 329 ரூபாய் ஆகும். தமிழ்நாடு அரசு கொடுத்திருப்பதோ முதல் ரகத்திற்கு ரூபாய் 493... இரண்டாவது ரகத்திற்கு ரூபாய் 397 ஆகும்.

2023 ஆம் ஆண்டு ..ஒன்றிய அரசு முதல் ரகம் ரூ.2,203சாதாரணரகம்ரூ.,2183என்றுநிர்ணயித்தது. தமிழ்நாடுஅரசுவாக்குறுதிபடிஅப்போதேரூ.2500 கொடுத்திருந்தால்... மேற்கண்ட ஒன்றிய அரசின் மூன்றாண்டு விலை உயர்வையும் சேர்த்து...முதல் ரகத்திற்கு 2,849 ரூபாய்..



இரண்டாவதுரகத்திற்கு 2,829 ரூபாய் இப்போது கிடைத்திருக்கும். தமிழ்நாடு அரசு 3 ஆண்டுகளில் கொடுத்து வந்த ஊக்கத்தொகையையும் சேர்த்தால்.... சராசரி ஒரு குவின்டால் நெல் ரூபாய் 3,278 கிடைத்திருக்கும். ஆகவே இது விவசாயிகளுக்கு ஏற்பட்ட கூடுதல் இழப்பாகும். ஆக மூன்று ஆண்டுகளில் விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கிற இழப்பு சராசரி ஒரு குவிண்டாலுக்கு 3,239 ரூபாய். திமுக ஆட்சியின் வாக்குறுதி மீறலால் விவசாயிகளுக்கு கடந்த மூன்று ஆண்டுகளில் ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் இழப்பாகும்.

கரும்புக்கும் வாக்குறுதி படி விலை வழங்கப்படவில்லை. இதனால் விவசாயிகள்நம்பிக்கை இழந்து உள்ளனர். உற்பத்திக்கான செலவு உயர்ந்த வரும் நிலையில் சி2+50 %படி ஒன்றிய அரசு உரியவிலையை மட்டுமல்ல... லாபகரமான விலையாக ஒன்றிய அரசு அறிவிக்காது அடம்பிடித்து வரும் நிலையில் விவசாயிகளின் போராட்டம் தொடர்கிறது. இடுபொருள் உள்ளிட்ட முதலீட்டு செலவுகள் உயர்ந்து வரும் நிலையில் உற்பத்தியில் ஈடுபடும் விவசாயிகளுக்கு எந்தப் பயனும் இல்லை. ஆனாலும் நெல் உற்பத்தியை கூடுதல் படுத்தி நாட்டின் உணவு சேமிப்பிற்கு... ஏற்றுமதியின் மூலம் இந்திய நாடு அந்நிய செலாவணி பெறுவதற்கு தன்னலமற்று உழைத்து வருகின்றனர். ஆனாலும் இந்தியாவின் சில மாநிலங்கள் விவசாயிகளின் நம்பிக்கையை பெற்றிடும் நிலையில்... கடந்த பல ஆண்டுகளாகவே ஒன்றிய அரசின் விலையோடு 40 சதம் ரூபாய் கூடுதலாக சேர்த்து நெல் கொள்முதல் செய்து வருகிறது. சத்தீஸ்கர் மாநிலம் தொடர்ந்து இப்படியான விலை உயர்வை கொடுத்து வரும் சூழலில் நடப்பாண்டு ஒரு குவிண்டால் ரூபாய் 3,120 கொடுத்து வருகிறது. ஆகவேதமிழகமுதல்வர் குறைவு தொகையை சேர்த்து நெல் குவிண்டால் ரூபாய் 3,000 விலையாக அறிவித்திட வேண்டும் என கேட்டுக்கொள்கிறோம்."

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# திருச்செந்தூர் கோயிலுக்கு சென்றுவிட்டு திரும்பியபோது லாரி மீது கார் மோதி காவலர், 3 பேர் பலி: நீதிபதி படுகாயம்

எட்டயபுரம், ஜூன் 15

திருச்செந்தூர் சென்றுவிட்டு திரும்பும் வழியில், எட்டயபுரம் அருகே முன்னால் சென்ற லாரி மீது, நீதிபதியின் கார் மோதி போலீஸ்காரர் உள்பட 4 பேர் உயிரிழந்தனர். தஞ்சாவூர் மாவட்ட முதன்மை நீதிபதி உள்பட 2 பேர் படுகாயமடைந்தனர். தஞ்சாவூர் மாவட்ட முதன்மை நீதிபதியாக இருப்பவர் பூர்ண ஜெயஆனந்த். இவர் தனது பாதுகாப்பு போலீஸ்காரர் நவீன் குமார், தஞ்சை மாவட்ட முதன்மை நீதிமன்ற அலுவலக உதவியாளர்கள் உதயசூரியன், ஸ்ரீதர்குமார், பதிவேடு எழுத்தர் வாசு ராமநாதன், வக்கீல் தனஞ்ஜெய ராமச்சந்திரன் ஆகியோருடன் காரில் திருச்செந்தூர் முருகன் கோயிலுக்கு சென்றார். அங்கு சுவாமி தரிசனம் செய்து விட்டு காரில் நேற்று காலை புறப்பட்டு தஞ்சாவூருக்கு சென்று கொண்டிருந்தனர். காரை வாசு ராமநாதன் ஓட்டினார்.



தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரம் அடுத்த மேலக்கரந்தை விலக்கு அருகே, தூத்துக்குடியில் இருந்து அரியலூருக்கு ஜிப்சம் ஏற்றிச் சென்ற லாரியின் பின்னால் கார் திடீரென பயங்கரமாக மோதியது. இதில் காரின் முன் இருக்கை வரை லாரியின் உள்ளே சிக்கியதில் பலத்த காயமடைந்த பாதுகாப்பு போலீஸ்காரர் நவீன் குமார், வக்கீல் தனஞ்ஜெய ராமச்சந்திரன், வாசு ராமநாதன், ஸ்ரீதர்குமார் ஆகிய 4 பேரும் உடல் நசுங்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். நீதிபதி பூர்ண ஜெயஆனந்த், தஞ்சை மாவட்ட முதன்மை நீதிமன்ற அலுவலக உதவியாளர் உதயசூரியன் ஆகிய இருவரும் படுகாயம் அடைந்தனர்.

தகவலறிந்து சென்ற மாசார்பட்டி போலீசார், படுகாயமடைந்த நீதிபதி பூர்ண ஜெயஆனந்த், உதயசூரியன் ஆகியோரை மீட்டு விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். விபத்து குறித்து மாசார்பட்டி போலீசார் வழக்கு பதிந்து லாரி டிரைவரான கடலூர்மாவட்டம்பொம்மரக்குடியை சேர்ந்த விஜயராஜிடம் (27) விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம், அப்பகுதியில் பரபரப்பையும், சோகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

# மதுரை - அபுதாபி நேரடி விமான சேவை தொடக்கம்

அவனியாபுரம், ஜூன்15

மதுரை விமான நிலையத்திலிருந்து நேரடி உள்ளூர்சேவையாகசென்னை –ஐதராபாத், பெங்களூரு, டெல்லி, மும்பை, விஜயவாடா உள்ளிட்ட நகரங்களுக்கு விமான சேவைகள் இயக்கப்பட்டு வருகின்றன. அதேபோல் வெளிநாட்டு சேவையாக துபாய், கொழும்பு நகரங்களுக்கு நேரடி சேவையும், மலேசியாவின் பினாங்கு நகருக்கு சென்னை வழியாகவும் விமானங்கள் இயக்கப்படுகின்றன. மதுரை விமானநிலையம் சுங்கத்துறையுடன் கூடிய துஎன்பதால் இங்கிருந்து வெளிநாட்டு சேவையாக பல வெளிநாட்டு நகரகளுக்கு விமானம் இயக்க தொடர்ந்து தென் தமிழக மக்களால் கோரிக்கை வைக்கப்பட்டு வருகிறது.

அதன் அடிப்படையில் இண்டிகோ நிறுவனம் ஐக்கிய அரபு நாட்டின் தலைநகரான அபுதாபிக்கு நேற்று தனது




சேவையை துவக்கியது. மதுரையிலிருந்து வாரத்தில் 3 நாட்கள் (திங்கள், புதன்,

வெள்ளி) மதியம் 2.35க்கு புறப்படும் விமானம் அபுதாபிக்கு அந்நாட்டு நேரப்படி மாலை 5.20க்கு சென்றடையும். அதே போல் அபுதாபியிலிருந்து அந்நாட்டு நேரப்படி காலை 7.20க்கு புறப்படும் விமானம் மதுரை விமான நிலையத்திற்கு மதியம் 1.50 மணிக்கு வந்து சேரும். மொத்த பயண நேரம் 4 மணி 15 நிமிடம். நேற்று அபுதாபியில் இருந்து கிளம்பி மதுரைக்கு வந்த முதல் விமானத்தில் 134 பயணிகள் வந்தனர். மதுரையிலிருந்து அபுதாபிக்கு 174 பயணிகள் புறப்பட்டுச் சென்றனர்.

# 61 நாள் தடை காலம் நள்ளிரவுடன் நிறைவு; டெல்டாவில் 20,000 மீனவர்கள் கடலுக்கு செல்ல ஆயத்தம்: படகுகளில் மீன்பிடி உபகரணங்கள், ஐஸ் கட்டிகள் ஏற்றும் பணி மும்முரம்

நாகை, ஜூன்15

மீன் பிடி தடைக்காலம் நாளைநள்ளிரவுடன் முடிவதால் டெல்டாவில் சுமார் 20,000 மீனவர்கள் கடலுக்கு செல்ல ஆயத்தமாகி வருகின்றனர். தமிழகத்தில் கிழக்கு கடற்கரை மாவட்டங்களில் கடலில் மீன்களின் இனப்பெருக்கத்தை அதிகரிக்கும் வகையில் ஆண்டுதோறும் ஆழ்கடலில் மீன்பிடிக்க 61 நாட்கள் தடை விதிக்கப்படுகிறது.அதன் படி இந்தாண்டுக்கான மீன்பிடி தடைகாலம் கடந்த ஏப்ரல் 14ம் தேதி துவங்கியது. இதனால் சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், கடலூர், நாகை, திருவாரூர், தஞ்சை, புதுக்கோட்டை, காரைக்கால் உள்பட 14 கடற்கரை மாவட்டங்களை சேர்ந்த விசைப்படகுகள் கடலுக்கு செல்லவில்லை. மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதை கருத்தில் கொண்டு மீனவர் குடும்பங்களுக்கு தமிழக அரசால் தலா ரூ.8000 தடைக்கால நிவாரணம் வழங்கப்பட்டது.




தடைகாலத்தில் மீனவர்கள் தங்களது படகுகள், மீன்பிடி உபகரணங்களை சீரமைத்தனர். ஒவ்வொரு படகுக்கும் ரூ.3 லட்சம் முதல் ரூ.5 லட்சம் வரை செலவு செய்து, சீரமைப்பு பணி நடந்தது. இந்நிலையில் மீன்பிடி தடைக்காலம் நாளை(14ம் தேதி) நள்ளிரவுடன் நிறைவு பெறுகிறது. நாகை மாவட்டத்தில் 590 விசைப்படகுகளை சேர்ந்த 10 ஆயிரம் மீனவர்கள், தஞ்சை மாவட்டத்தில் 146 விசைப்படகுகளை சேர்ந்த 2,000 மீனவர்கள், மயிலாடுதுறை மாவட்டத்தில்5,000மீனவர்கள், புதுகை மாவட்டத்தில் 3,000மீனவர்கள், காரைக்காலில் 500 மீனவர்கள் ஓய்வில் இருந்தனர். இவர்கள் நாளை நள்ளிரவு முதல் கடலுக்கு செல்ல ஆயத்தமாகி வருகின்றனர். முன்னதாக தடை காலத்தில் மீனவர்களின் படகுகளை மீன்வளத்துறை அதிகாரிகள் ஆய்வு செய்தனர். அப்போது மீன்பிடிப்பதற்கு தேவையான சான்றிதழ்களை மீனவர்கள் புதுப்பித்தனர்.

மேலும், படகுகள் பதிவு, மீன்பிடி உரிமம் தொடர்பான ஆவணங்கள் சரியாக உள்ளதா என்று அதிகாரிகள் ஆய்வு செய்தனர். அதேபோல் கடந்த 2 நாட்களாக ஐஸ் கட்டிகள், வலைகள், மீன்பிடி உபகரணங்களை படகுகளில் ஏற்றி வருகின்றனர். மேலும் படகுகளில் மானிய டீசல் நிரப்பும் பணியும் நடந்து வருகிறது. நாளை நள்ளிரவு 12 மணிக்கு மேல் அல்லது நாளைமறுதினம் அதிகாலை முதல் மீனவர்கள் படகுகளுக்கு மாலை அணிவித்து, தீபாராதனை காட்டி, பூஜை செய்து கடலுக்கு புறப்பட உள்ளனர். மீனவர்கள் 61 நாட்களுக்கு பிறகு கடலுக்கு செல்வதால் அதிகளவில் மீன்கள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன்மூலம் மீன்கள்விலை குறைய வாய்ப்புள்ளது. அதேபோல் மீனவர்கள் மட்டுமின்றி மீன் பிடி தொழில் சார்ந்த சுமார் 10 லட்சம் பேர் பயனடைய உள்ளனர்.

# நடைபாதை விளிம்புகளுடன் கட்டடங்களை இணைத்திடும் சரிவான இணைப்புகள் குறித்த வழிகாட்டு நெறிமுறைகளை பொதுமக்கள் பின்பற்றிட கேட்டுக்கொள்ளப்படுகிறது

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் சாலையோரங்கள் மற்றும் நடைபாதை விளிம்புகளுடன் கட்டடங்களை இணைத்திடும் சரிவானஇணைப்புகள்குறித்த வழிகாட்டு நெறிமுறைகளைபொதுமக்கள்பின்பற்றிட கேட்டுக்கொள்ளப்படுகிறது. பெருநகர சென்னை மாநகராட்சியினைதூய்மையாகப் பராமரிக்கும் வகையில் கட்டடம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகள் அகற்றுதல், சுத்தமான மற்றும்பாதுகாப்பானகட்டுமானம் குறித்த வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டு தீவிரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில், தற்போது குடிமக்கள் மற்றும் வணிக நிறுவனங்கள் தங்களது கட்டடத்திற்கு சாலை மற்றும் நடைபாதை விளிம்புகளுடன் சரிவான இணைப்புகளுக்காக உடைந்த செங்கற்கள், சுண்ணாம்பு, கட்டடக் கழிவுகள், மண் கலவைகள் போன்றவற்றை பயன்படுத்துகின்றனர். இதனால், தூசி பரவல் மற்றும் காற்று மாசுபாடு ஏற்படுகிறது. கட்டுமானக் கழிவுகள் மற்றும் மண் தூசுகள் மழைநீர் வடிகால்களில் சேர்வதால், மழைநீர் தேங்கி நீரின் ஓட்டத்தை தடைசெய்கின்றன. மழைக் காலங்களில் மழைநீர் வடிகால்கள் அடைபட்டு சாலைகளில் தண்ணீர் தேங்குவதால் பொதுமக்களுக்கு பெரும்பாதிப்பும் ஏற்படுகிறது.

இதன் தொடர்ச்சியாக, மக்கள் நலன் மற்றும் பாதுகாப்பினை உறுதி செய்திடும் வகையிலும், மழைநீர் வடிகால் அமைப்புகள் சிறப்பாக செயல்படுவதை உறுதி செய்யும் நோக்கிலும், பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குள் உள்ள சாலையோரங்கள் மற்றும் நடைபாதை விளிம்புகளுடன் குடியிருப்புகள், வணிகவளாகங்கள், வணிக நிறுவனங்கள், அலுவலகக் கட்டடங்கள் உள்ளிட்ட பல்வேறு பயன்பாட்டுக்



கட்டடங்களை இணைத்திடும் சரிவான இணைப்புகள் தொடர்பாக பின்வரும் வழிகாட்டுதல்கள் வெளியிடப்படுகின்றன. வழிகாட்டு நெறிமுறைகள்: □கட்டடக் கழிவுகள் மற்றும் உடைந்த செங்கற்களை சரிவான இணைப்புகளுக்காக பயன்படுத்துதல் முற்றிலும் தடைசெய்யப்படுகிறது. □அதற்குப் பதிலாக, மரம் அல்லது இரும்பு போன்ற சுற்றுச்சூழல் மாசுபாடு இல்லாத பொருட்களைப் பயன்படுத்தலாம்.

□இந்த இணைப்புகள் பாதுகாப்பாக பொருத்தப்பட்டிருக்க வேண்டும். பொதுநலப் போக்குவரத்திற்கு எவ்வித இடையூறும் இல்லாமல் இருக்க வேண்டும். மேலும், மழைநீர் வடிகால் பராமரிப்புக்கு எவ்வித தடையில்லாதவையாகவும் இருக்க வேண்டும். □இந்த வழிகாட்டு நெறிமுறைகள் வருகின்ற ஜூன் மாதம் 30ஆம் தேதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்படுகிறது. அதன் பின்னர் இந்த வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றாதவர்கள் மீது கட்டட மற்றும் இடிபாட்டுக் கழிவு மேலாண்மைக்கான வழிகாட்டுதல்கள் 2025ன் கீழ் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் பெருநகர சென்னை மாநகராட்சியின் www.chennaicorporation.gov.in என்ற இணைய தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. எனவே, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் சாலையோரங்கள் மற்றும் நடைபாதை விளிம்புகளுடன் கட்டடங்களை இணைத்திடும் சரிவானஇணைப்புகள்குறித்த வழிகாட்டுதல்களை பொதுமக்கள் பின்பற்றிட கேட்டுக்கொள்ளப்படுகிறது.

# TNPSC தேர்வு நடைபெற இருப்பதால் செமஸ்டர் தேர்வுகள் ஒத்திவைப்பு

சென்னை, ஜூன் 15

TNPSCகுரூப்1முதன்மை தேர்வானது ஜூன் 15ம் நாள் நடைபெற இருப்பதால், அதே நாளில் நடைபெற இருந்த சென்னை பல்கலைக்கழகத்தின் தொலைதூரக் கல்வி செமஸ்டர் தேர்வுகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. மாற்றுத் தேதிகள் www.ideunom.ac.in இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளதாக சென்னை பல்கலைக்கழகம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

# 120 நாட்களுக்கு, 5184.00 மில்லியன் கன அடிக்கு மிகாமல், பவானிசாகர் அணையிலிருந்து தண்ணீர் திறந்து விட அரசு ஆணை

ஈரோடு மாவட்டம், பவானிசாகர் அணையிலிருந்து காலிங்கராயன் வாய்க்கால்களிலுள்ள பாசனநிலங்களுக்கு 2025 2026 ஆம் ஆண்டு, முதல் போக பாசனத்திற்கு 16.06.2025 முதல் 13.10.2025 வரை 120 நாட்களுக்கு, 5184.00 மில்லியன் கன அடிக்கு மிகாமல், தண்ணீர்திறந்து விட அரசு ஆணையிட்டுள்ளது. இதனால், ஈரோடு மாவட்டத்திலுள்ள, பவானி, ஈரோடு, மொடக்குறிச்சி மற்றும் கொடுமுடி வட்டங்களிலுள்ள 15743 ஏக்கர் பாசன நிலங்கள் பாசன வசதி பெறும்.



திருப்பூர் மாவட்டம், பரம்பிக்குளம் ஆழியாறு திட்டத்தில், திருமூர்த்தி அணையிலிருந்து, பாலாறு படுகை மூன்றாம் மண்டலப் பாசனப் பகுதிகளுக்குட்பட்ட 94362ஏக்கர்நிலங்களுக்கு ஐந்து (5) சுற்றுகள் 29.01.2025 முதல் 13.06.2025 முடிய 135 நாட்களுக்குள் உரிய இடைவெளிவிட்டு, 10300 மில்லியன் கன அடிக்கு மிகாமல் (நீரிழப்பு உட்பட) தண்ணீர் திறந்து விட ஆணையிடப்பட்டதை தொடர்ந்து, மேலும், பாசனகாலத்தை 14.06.2025 முதல் 05.07.2025 முடிய 22 நாட்களுக்கு கால நீட்டிப்பு செய்து தண்ணீர் திறந்து விட அரசு ஆணையிட்டுள்ளது.

# மெட்ரோ பாலம் கட்டுமான பணியின்போது விபத்து: உயிரிழந்தவருக்கு மெட்ரோ ரூ.5 லட்சம், எல் அண்ட் டி ரூ.20 லட்சம் இழப்பீடு

சென்னை, ஜூன் 15

சென்னை மெட்ரோ ரயில் பாலம் கட்டுமான பணியின்போது ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்தவருக்கு எல் அண்ட் டி ரூ.20 லட்சம் இழப்பீடு வழங்கி உள்ளது. மெட்ரோ ரயில் பாலப் பணியின் போது இணைப்பு தூண்கள் விழுந்து ரமேஷ் (43) என்பவர் உயிரிழந்தார். பாலத்தை இணைக்கும் தூண்களைபொருத்த முயன்றபோது திடீரென கீழே விழுந்து




விபத்துக்குள்ளானது.

நாகர்கோவிலை சேர்ந்த ரமேஷ் குடும்பத்துக்கு மெட்ரோ ரயில் நிறுவனம் சார்பில் ஏற்கனவே ரூ.5 லட்சம் இழப்பீடு வழங்கப்பட்டது. ரமேஷ் குடும்பத்துக்கு ஒப்பந்த நிறுவனமான எல் அண்ட் டி நிறுவனம் சார்பில் ரூ.20 லட்சம் இழப்பீடு வழங்கியது. மெட்ரோ ரயில் கட்டுமானம் இடிந்து விழுந்த விபத்து தொடர்பாக விசாரணை நடத்த குழு அமைக்கப்பட்டுள்ளது.

# ஆலாத்தூரில் மின்னணு குடும்ப அட்டை வழங்கல் மாநகராட்சியின் 718 இடங்களில் சாலை பணிகளுக்கான பூமிபூஜை

மதுரை / வாடிப்பட்டி : மதுரை மாநகராட்சியில் 718 இடங்களில் புதிய தார்சாலை அமைப்பதற்கான பூமிபூஜை மற்றும் ஆலாத்தூரில் பொதுமக்களுக்க மின்னணு குடும்ப அட்டைவழங்கும்விழாஅமைச்சர்பி.மூர்த்திதலைமையில் நேற்று நடைபெற்றது.

மதுரை மாநகராட்சி சோலை அழகுபுரம் பகுதி, மேற்கு சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட ஜெய்ஹிந்துபுரம் 2வது மெயின் ரோடு பகுதிகளில் 326 இடங்களில் புதிய தார்சாலைகள், பேவர் பிளாக், கான்கிரிட் சாலைகள் 38.01 கி.மீ நீளத்திற்கு ரூ.2375.20 லட்சம் மதிப்பீட்டில் அமைகிறது.

இதேபோல், மதுரை பகத்சிங் தெரு, துரைச்சாமி நகர் மெயின்ரோடு உள்ளிட்ட பகுதிகளில்124 எண்ணிக்கையில் புதிய தார்சாலைகள், கான்கீரிட் சாலைகள் என 21.81 கி.மீ நீளத்திற்கு ரூ.1441.15 லட்சம் மதிப்பீட்டில் அமைகிறது.

மேலும், சம்மட்டிபுரம் மெயின் ரோடு உள்ளிட்ட பகுதிகளில் 265 சாலைகள் 29.25 கி.மீ தூரத்திற்கு ரூ.2737.23 லட்சம் மதிப்பீட்டில் புதிய தார்சாலை, கான்கிரிட் சாலைகள் அமைகிறது. இதன்படி மொத்தம் 718 சாலைகள் 89.07 கி.மீ நீளத்திற்கு ரூ.6553.58 லட்சம் மதிப்பீட்டில் புதிய சாலைப்பணிகளை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி நேற்று பூமிபூஜை நடத்தி தொடங்கி வைத்தார்.

மேலும், விராட்டிபத்து பகுதியில் புதிய கவுன்சிலர் அலுவலகம், வார்டு 65ல் கவுன்சிலர் அலுவலக புதிய கண்காணிப்பு கேமிரா, வார்டு 74ல் புதிய தார்சாலை ஆகியவற்றை மக்கள்பயன்பாட்டிற்கு அமைச்சர் பி.மூர்த்தி திறந்து வைத்தார்.

தூய்மை பாரத இயக்கம் 2.0 திட்டத்தின் கீழ் ரூ.9.74 கோடியில் கோச்சடை பகுதியில் நாள்தோறும் 200 மெட்ரிக் டன் திறன் கொண்ட நவீன குப்பை பரிமாற்ற நிலையத்தின் கட்டுமான பணிகளுக்கும் அமைச்சர் அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்ச்சிகளில் கலெக்டர் சங்கீதா, மேயர் இந்திராணி, மாநகராட்சி ஆணையாளர் சித்ரா விஜயன், துணை மேயர் நாகராஜன், மண்டலத் தலைவர்கள் சுவிதா, பாண்டிச்செல்வி, சரவண புவனேஸ்வரி, திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் தனசெல்வம், இளைஞர் அணி மாநில துணை செயலாளர் ஜி.பி.ராஜா, பகுதிச்



செயலாளர்கள் சசிக்குமார், காவேரி, தவமணி, சுதன், மதி வெங்கடேஷ், அன்பழகன் உள்ளிட்ட திரளான திமுக நிர்வாகிகள், பொதுமக்கள், அதிகாரிகள் பங்கேற்றனர்.

அடுத்ததாக, ஆலாத்தூரில் மாவட்ட வழங்கல் துறை சார்பாக பொதுமக்களுக்கு புதிய மின்ன1ணு குடும்ப அட்டைகள் வழங்கும் விழா நடைபெற்றது. இதற்கு அமைச்சர் பி.மூர்த்தி தலைமை வகித்து 8 வருவாய் வட்டங்களுக்கு உட்பட்ட 1016 பயனாளிகளுக்கு புதிய மின்னணு குடும்ப அட்டைகளை வழங்கினார்.

விழாவில் அவர் பேசும்போது, ''எல்லோருக்கும் எல்லாம் என்ற உயர்ந்த நோக்கத்தோடு திராவிட மாடல் ஆட்சி நடத்தும் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை செயல்படுத்தி வருகிறார்.

பல்வேறு நலத்திட்டங்களுக்கு குடும்ப அட்டை அவசியம். அதனை முறைப்படி மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும் என, முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார். அதன்படி இந்நிகழ்வு நடக்கிறது. தொடர்ந்து அரசு நலத்திட்ட உதவிகள் அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் செயல்பட்டு வருகிறோம்'' என்றார். இவ்விழாவில் கலெக்டர் சங்கீதா, மாவட்ட வருவாய் அலுவலர் அன்பழகன், மாவட்ட வழங்கல் அலுவலர் முத்து முருகேச பாண்டியன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# விக்ரம் ரவீந்திரன் வீடு, அலுவலகத்திற்கு சீல் வைக்க அமலாக்கத்துறைக்கு என்ன அதிகாரம் இருக்கிறது? : ஐகோர்ட் அதிரடி

சென்னை , ஜூன்15

டாஸ்மாக் வழக்கில் அமலாக்கத்துறை பதிலளிக்க சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. தேனாம்பேட்டையில் உள்ள பிரபல சினிமா தயாரிப்பாளரான ஆகாஷ் பாஸ்கரன், தொழிலதிபர் விக்ரம் ரவீந்திரன் ஆகியோர் வீட்டில் அமலாக்கத்துறை கடந்த மாதம் சோதனை நடத்தியது. இதன்பின் தொழிலதிபர் விக்ரம் ரவீந்திரன் வீடு மற்றும் அலுவலகம் ஆகியவற்றுக்கு அமலாக்கத்துறை அதிகாரிகள் சீல் வைத்தனர். தொடர்ந்து அமலாக்கத்துறை தரப்பில் விசாரணைக்கு ஆஜராக நோட்டீஸ் அளிக்கப்பட்டது. இந்த நிலையில் ஆகாஷ் பாஸ்கரன், விக்ரம் ரவீந்திரன் ஆகியோர் தரப்பில் அமலாக்கத்துறை நடவடிக்கைக்கு எதிராக சென்னை உயர்நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்யப்பட்டது.அதில்,அமலாக்கத்துறைநடவடிக்கைக்கு தடை விதிக்க வேண்டும் எனவும், அதிகாரிகள் வைத்த சீலினை அகற்ற வேண்டும் என்றும் கோரிக்கை வைத்தனர்.




இந்த மனு நீதிபதிகள் ரமேஷ் மற்றும் லக்ஷ்மிநாராயணன் அமர்வு முன் விசாரணைக்கு வந்தது. இருதரப்பு வாதங்களை கேட்ட நீதிபதிகள், “எதன் அடிப்படையில் சினிமா தயாரிப்பாளர் ஆகாஷ் பாஸ்கரன், தொழிலதிபர் விக்ரம் ரவீந்திரனிடம் விசாரிக்க முடிவு எடுக்கப்பட்டது? விக்ரம் ரவீந்திரன் வீடு, அலுவலகங்கள் எதன் அடிப்படையில் சீல் வைக்கப்பட்டது? அமலாக்கத்துறை சோதனை நடத்தலாம், ஆவணங்களை கைப்பற்றலாம். சீல் வைப்பதற்கு என்ன அதிகாரம் இருக்கிறது? அமலாக்கத்துறை சட்டத்தை பின்பற்ற வேண்டும்,” என்று தெரிவித்தனர். மேலும் வீடு பூட்டியிருந்தால் போலீசார் உதவியுடன் கதவை உடைத்து சோதனை நடத்தி இருக்கலாமே என்று கேள்வி எழுப்பியதோடு, அமலாக்கத்துறை பதிலளிக்க உத்தரவிட்டு, வழக்கை ஜூன் 17ம் தேதி ஒத்திவைத்தனர்.

# அதிமுகபாஜக கூட்டணி குறித்து குழப்பத்தை ஏற்படுத்த வேண்டாம் செல்லூர் ராஜூ



மதுரை, ஜூன் 15

முன்னாள் அமைச்சர் செல்லூர் ராஜூ மதுரையில் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் பேசியதாவது;

"கூட்டணி ஆட்சியா? அ.தி.மு.க. ஆட்சியா? என்பது குறித்து எங்களிடம் குழப்பத்தை ஏற்படுத்த வேண்டாம். இது தொடர்பாக மத்திய உள்துறை மந்திரி அமித்ஷாவிடம் பேசியதும், தேர்தல் கூட்டணி குறித்தும் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெளிவாக கூறியுள்ளார். ஒரு முன்னாள் முதல்வரை தரக்குறைவாகவும், அதனை கேட்பவரின் காதுகள் கூசும் அளவிற்கு முதல்வர் பேசியிருக்கிறார். இந்த போக்கை அவர் மாற்றிக் கொள்ள வேண்டும். எடப்பாடி மீது நாளுக்கு நாள் புகழும், செல்வாக்கும் அதிகரிப்பதால் முதல்வர் ஸ்டாலின் இதுபோன்று பேசி வருகிறார்.

மதுரையே அழகாக காட்சியளிக்க காரணம் அ.தி.மு.க. ஆட்சியின் பல்வேறு திட்டங்களும், 8,000 கோடி ரூபாய் வரை நிதி ஒதுக்கீடு செய்ததால் தான். அரசர் காலத்திற்குப் பிறகு அம்மாவின் ஆட்சியில் தான் எடப்பாடி பழனிசாமி குடிமராமத்து திட்டத்தை கொண்டு வந்தார். அ.தி.மு.க. ஆட்சியில் நாங்கள் என்ன செய்தோம் என்பது மக்களுக்கு தெரியும். மேலும், மத்திய அரசின் திட்டங்களுக்கு தான் தி.மு.க. அரசு தனது ஸ்டிக்கரை ஒட்டுகிறது." இவ்வாறு அவர் கூறினார்.

# தண்டையார்பேட்டையில் அரசு அச்சக பணியாளர்களுக்காக ரூ.40 கோடியில் புதிய குடியிருப்புகள் விரைவில் முதல்வர் திறந்து வைப்பார்: அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தகவல்

சென்னை, ஜூன் 15

சென்னை, தண்டையார்பேட்டை, காமராஜர் நகரில் எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின் சார்பில் அரசு அச்சக பணியாளர்களுக்காக புதிதாக கட்டப்பட்டு வரும் குடியிருப்புகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். பின்னர், அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நிருபர்களிடம் கூறியதாவது:

இந்த குடியிருப்பில் ஏறத்தாழ 96 பணியாளர்கள் குடும்பத்துடன் குடியிருக்கக்கூடிய வகையில் 430 சதுர அடியில் ஒவ்வொரு வீடும் அமைகிறது.

இப்பணிகள் விரைவில் முடிவடைய இருக்கிறது. பணிகள் முடிந்தவுடன் பணியாளர்கள் குடியேறுவதற்கான சூழ்நிலையை உருவாக்குவோம்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் விரைவில் புதிதாக கட்டப்பட்ட குடியிருப்பை திறந்து வைக்க வேண்டும் என்ற கோரிக்கையோடு அவரின் கவனத்திற்கு கொண்டு செல்வோம். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

இந்த ஆய்வின்போது, சென்னை மாநகராட்சி மேயர் பிரியா, எம்பி கலாநிதி வீரசாமி, எம்எல்ஏக்கள் ஆர்.டி.சேகர், ஜே.ஜே.எபினேசர், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையர் ஷோபனா, தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் ராஜாராமன், சென்னை மாவட்ட ஆட்சிதலைவர் ரஷ்மி சித்தார்த் ஜகடே மற்றும் பொது பணித்துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

# தென்பெண்ணை ஆற்றில் பொங்கி வரும் ரசாயன நுரை: விவசாயிகள் அதிர்ச்சி



கிருஷ்ணகிரி, ஜூன் 15

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் அருகே உள்ள கெலவரப்பள்ளி அணையின் முழு கொள்ளளவான 44.28 அடியில், தற்போது 40.76 அடி உயரத்திற்கு தண்ணீர் இருப்பு உள்ளது. அணையில் இருந்து வினாடிக்கு 981 கனஅடி நீர் அணையின் 5 மதகுகள் வழியாக தென்பெண்ணை ஆற்றில் வெளியேற்றப்பட்டு வருகிறது. இந்த நிலையில், அணையில் இருந்து இருந்து தென்பெண்ணை ஆற்றில் திறந்துவிட ப்பட்ட தண்ணீரில் அதிகப்படியான அளவு ரசாயன நுரை காணப்படுகிறது. இந்த ரசாயன நுரை காற்றில் பறந்தும், சுற்றுப்புற பகுதிகளுக்கு பரவியும் வருகிறது. இதனால் அப்பகுதியை சேர்ந்த விவசாயிகள் அதிர்ச்சியடைந்துள்ளனர். இது தொடர்பாக அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# ஒருங்கிணைந்த தொழில்நுட்ப பணிகளில் 1910 காலிப்பணியிடங்களுக்கு விண்ணப்பிக்கலாம்: ஜூலை 12ம் தேதி கடைசி நாள்



சென்னை, ஜூன் 15

டிஎன்பிஎஸ்சி செயலாளர் கோபால சுந்தரராஜ் வெளியிட்ட அறிவிப்பு தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகத்தில் தொழில்நுட்ப உதவியாளர் (மின்னியல்) உள்ளிட்ட 58 பதவிகளுக்கான 1910 காலிப்பணியிடங்களை நிரப்ப ஒருங்கிணைந்த தொழில்நுட்ப பணிகள் தேர்வு (பட்டயம், தொழிற்பயிற்சி நிலை)க்கான அறிவிக்கை நேற்று வெளியிடப்பட்டுள்ளது. ஜூலை 12ம் தேதி வரை இணையவழியில் (www.tnpsc.gov.in, www.tnpscexams.in) விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம். தமிழ்நாடு சினிமா

ஓஎம்ஆர்/ கணினி வழித் தேர்வு முறையில் 31.8.2025, 7.9.25 மற்றும் 15.9.25 வரை நடைபெறும். ஒருங்கிணைந்த தொழில்நுட்ப பணிகள் தேர்வு (பட்டயம் தொழிற்பயிற்சி நிலை) 2024ம் ஆண்டு அறிவிக்கையில் இரண்டு நிதியாண்டுகளுக்கான 2022 காலிப்பணியிடங்கள் நிரப்பப்பட உள்ளன. அதாவது, ஒரு நிதியாண்டிற்கு சராசரியாக 1011 காலிப்பணியிடங்கள் நிரப்பப்பட உள்ளன.

2024ம் ஆண்டிற்கான அறிவிக்கையோடு ஒப்பிடும்போது 2025ம் ஆண்டு ஒருங்கிணைந்த தொழில்நுட்ப பணிகள் தேர்வு (பட்டயம் தொழிற்பயிற்சி நிலை) மூலம் ஒரு நிதியாண்டிற்கு (202526) 1910 காலிப்பணியிடங்கள் நிரப்பப்பட உள்ளன.

மேலும், 2025ம் ஆண்டு அறிவிக்கையில் வெளியிடப்பட்ட காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை, அரசுத் துறை, நிறுவனங்களிடமிருந்து அதிகரித்து பெறப்படும் பட்சத்தில் கலந்தாய்விற்கு முன்பாக மேலும் அதிகரிக்கப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# டிப்பர் லாரி மோதி தந்தை மகன் பலி



கோவை, ஜூன் 15

கோவை மாவட்டம் துடியலூரைச் சேர்ந்த ராஜேஷ் (36) இவர் சரவணம்பட்டி பகுதியில் உள்ள ஐடி நிறுவனத்தில் மேலாளராக பணியாற்றி வருகிறார். இவர் தன்னுடைய 10 வயது மகனான வினீத்தை காளப்பட்டி பகுதியில் அமைந்துள்ள ஸ்கேட்டிங் பயிற்சி பள்ளியில் சேர்த்துள்ளார். ராஜேஷ் தினமும் பயிற்சிக்காக மகனை அழைத்துச் செல்வதை வழக்கமாக வைத்துள்ளார்.

இந்நிலையில் இன்று அதிகாலை தனது மகனை பயிற்சிக்காக அழைத்து வந்துள்ளார். அப்போது சரவணம்பட்டி அருகே வந்துகொண்டு இருக்கும் போது பின்னால் அதிவேகமாக வந்த டிப்பர் லாரி ராஜேஷின் ஆக்டிவா வாகனத்தின் மீது மோதி விபத்துக்குள்ளானது.

இதில் தந்தை மற்றும் மகன் மீது டிப்பர் லாரியின் சக்கரங்கள் ஏறி இறங்கியதில் உடல் நசுங்கி சம்பவஇடத்திலேஇருவரும் உயிரிழந்தனர். இதனை தொடர்ந்து அங்கு போக்குவரத்து புலனாய்வு பிரிவு போலீசார் இருவரின் உடல்களை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக கோவை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இந்த விபத்து குறித்து காட்டூர் போக்குவரத்து புலனாய்வு போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். மேலும் டிப்பர் லாரியை ஓட்டி வந்த மனோகர் என்பவரை கைது செய்து டிப்பர் லாரியை பறிமுதல் செய்தனர். மகனை ஸ்கேட்டிங் பயிற்சி பள்ளிக்கு அழைத்துச் செல்லும் போது விபத்து ஏற்பட்டு இருவரும் உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# ஒற்றுமையுடன் ராகுல் காந்தியை பிரதமர் ஆக்குவதே நமது லட்சிய இலக்கு: இளைஞர் காங்கிரஸ் தலைவர் லெனின் பிரசாத் அறிக்கை



சென்னை, ஜூன் 15

ஒற்றுமையாக இருந்து, ராகுல் காந்தியை பிரதமர் ஆக்குவதே நமது லட்சிய இலக்கு என்று இளைஞர் காங்கிரஸ் தலைவர் லெனின் பிரசாத் கூறியுள்ளார். தமிழ்நாடு இளைஞர் காங்கிரஸ் தலைவர் எம்.லெனின் பிரசாத் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: கடந்த மூன்று ஆண்டுகளாக என்னோடு பயணித்த சக இளைஞர் காங்கிரஸ் நிர்வாகிகளுக்கும் உறுப்பினர்களுக்கும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மூன்று ஆண்டுகளில் தமிழ்நாடு முழுவதும் பல கட்டப் போராட்டங்கள், பொதுக் கூட்டங்கள், பல நிகழ்ச்சிகள் என அயராமல் பாடுபட்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். எனக்கு பக்க பலமாக இருந்த அனைத்து தலைவர்களுக்கும் நன்றி. எனது தலைமையில் இந்த மூன்றாண்டுகளில் இளைஞர் காங்கிரஸ் நிர்வாகிகளுக்கு என்னால் மன வருத்தம் ஏற்பட்டிருந்தால் அதற்காக வருத்தம் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாம் அனைவரும் பயணித்த இளைஞர் காங்கிரஸ் தலைவர் பதவி இன்றுடன் முடிந்தாலும் கூட அதன் மேல் இருக்கின்ற அன்பும் பற்றும் என்றும் குறையாது. நாம் அனைவரும் ஒற்றுமையுடன் இளம் தலைவர் ராகுல் காந்தியின் கரங்களை வலுப்படுத்தி அவரை பிரதமர் ஆக்குவதே நமது லட்சிய இலக்காக கொண்டு தொடர்ந்து பயணிப்போம். புதிய இளைஞர்காங்கிரஸ்நிர்வாகிகள் அனைவருக்கும் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அதில் கூறியுள்ளார்.

# மதுரையில் இருந்து அபுதாபிக்கு விமான சேவை தொடங்கியது

மதுரை, ஜூன் 15

மதுரை விமான நிலையத்தில் இருந்து இலங்கை, துபாய் ஆகிய இரு வெளி நாடுகளுக்கு மட்டுமே பயணிகள் விமான சேவை இயக்கப்பட்டு வந்தது. இந்நிலையில் மூன்றாவதாக மதுரையிலிருந்து அபுதாபிக்கு இண்டிகோ விமானம் தனது பயண சேவையை துவங்கியுள்ளது.

இந்த விமானம் இன்று முதல் நாளாக அபுதாபியிலிருந்து பகல் 11.30 மணிக்கு புறப்பட்டு, மதியம் 1.15 மணிக்கு 134 பயணிகளுடன் மதுரை வந்து சேர்ந்தது. பின்னர் மீண்டும் மதுரையிலிருந்து 174 பயணிகளுடன் நண்பகல் 2.48 மணிக்கு அபுதாபி புறப்பட்டு சென்றது. மதுரையில் இருந்து அபுதாபிக்கு திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாட்களில் விமான சேவை இயக்கப்படும்.

பொதுவாக புதிய விமான சேவை துவங்கும் போது, விமான நிலையத்தில் தண்ணீர் பீய்ச்சி வரவேற்பு நிகழ்ச்சிகள் நடக்கும். ஆனால் நேற்று அகமதாபாத்தில் ஏர் இந்தியா விமானம் விபத்துக்குள்ளானதால், வரவேற்பு மற்றும் கொண்டாட்ட நிகழ்ச்சிகள் எதுவும் இல்லாமல் புதிய விமான சேவை மதுரை விமான நிலையத்தில் துவங்கியது.

# தந்தை இல்லாத எனக்கு தந்தையாக உயர் கல்விச் செலவை ஏற்ற முதல்வருக்கு நன்றி: பழங்குடியின மாணவி நெகிழ்ச்சி



சென்னை, ஜூன்15

தமிழ்நாடு முதல்வர் தந்தை இல்லாத எனக்கு தந்தையாக எனது உயர் கல்விச் செலவை ஏற்பதும், வீடு வழங்கியுள்ளதும் மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. தமிழ்நாடு முதல்வருக்கு எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன் என்று மாணவி ஒருவர் நெகிழ்ச்சியுடன் கூறியுள்ளார். சேலம் மாவட்டம், கல்ராயன்மலையை சேர்ந்த கருமந்துறை, அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட மேல்நிலைப் பள்ளி மாணவி ராஜேஸ்வரி பிளஸ்2 தேர்வில் 600க்கு 521 மதிப்பெண் பெற்றார். இவர் ஈரோடு மாவட்டம், பெருந்துறை அரசு பயிற்சி மையத்தில் சேர்ந்து உயர்கல்வி நுழைவுத்தேர்விற்கு தயாராகி வந்தார்.

இந்நிலையில் ஜெஇஇ மெயின், ஜெஇஇ அட்வான்ஸ் தேர்வுகளில் தேர்ச்சி பெற்று அகில இந்திய அளவில் 417 வது இடத்தில் தேர்ச்சி பெற்று சென்னை ஐ.ஐ.டி.யில் பயில தகுதி பெற்றார். மேலும் ஜெஇஇ அட்வான்ஸ்டு தொடர்பான கவுன்சிலிங்கிற்காக குமிழி ஏகலைவா உண்டி உறைவிட மாதிரி மேல்நிலைப்பள்ளியில் பழங்குடியினர் நலத் துறை மூலம் வாசுகி பவுண்டேசன் மூலம் நடத்தப்படும் உயர்கல்விக்கான பயிற்சி பெற்று வருகிறார். இவர், சென்னை ஐ.ஐ.டி.யில் விண்வெளி இன்ஜினியரிங் பாடப்பிரிவில் உயர் கல்வி பயில விருப்பம் தெரிவித்துள்ளார்.


முதல்வர் மு.க.ஸ்டாலின் மாணவி ராஜேஸ்வரி சென்னை ஐ.ஐ.டி.யில் உயர்கல்வி பயில தகுதிப் பெற்றுள்ளதை அறிந்தவுடன், மாணவி ராஜேஸ்வரிக்கு எனது சல்யூட் என பாராட்டி, அவரது உயர்கல்விச் செலவை அரசே ஏற்கும் என அறிவித்தார். தொடர்ந்து, முதல்வர் கடந்த 12ம் தேதி சேலம் மாவட்ட சுற்றுப் பயணத்தின் போது, மாணவி ராஜேஸ்வரியை நேரில் அழைத்து பொன்னாடை அணிவித்து சிறப்பு செய்து, பழங்குடியினர் நலத்துறையின் தொல்குடித் திட்டத்தில் ரூ.5.73 லட்சம் மதிப்பிலான வீடு ஒதுக்கீடு ஆணையினையும், உயர்கல்வி பயில்வதற்கு உதவ ரூ.70,000 மதிப்பிலான மடிக்கணினியையும் வழங்கினார்.

இதற்கு, முதல்வருக்கு மாணவி ராஜேஸ்வரி நன்றி தெரிவித்தார். நான் ஐஐடியில் பயில தகுதி பெற்றுள்ளதையொட்டி முதல்வர் எனக்குவாழ்த்து தெரிவித்து மேற்படிப்பிற்கான செலவுகளை அரசே ஏற்கும் என அறிவித்தார். எனது உயர்கல்விக்கு உதவிடும் வகையில் மடிக்கணினியினை வழங்கியுள்ளார். வீடு கட்டிக்கொடுப்பதற்கான ஆணையும் வழங்கியுள்ளார்.

நன்றாக பயின்று இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தில் பணியில் சேர்ந்து தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்ப்பேன் என இத்தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். தந்தை இல்லாத எனக்கு முதல்வர் தந்தையாக நின்று, எனது உயர் கல்விச் செலவை ஏற்பதும், வீடு வழங்கியுள்ளதும் மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது.

அவருக்கு எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன் என்று நெகிழ்ச்சியுடன் கூறியுள்ளார்.

# ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து அதிகரிப்பு



ஒகேனக்கல், ஜூன் 15

தமிழககர்நாடகா காவிரி கரையோரங்களில் பெய்த மழையின் காரணமாக ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து குறைவதும் அதிகரிப்பதுமாக இருந்து வருகிறது. தமிழக காவிரி நீர்பிடிப்பு பகுதிகளான அஞ்செட்டி, கேரட்டி, நாட்றாம்பாளையம், ராசிமணல் உள்ளிட்ட பகுதிகளில் பெய்த மழையின் காரணமாக நேற்று ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து 6,500 கன அடியாக வந்தது.

இந்த நிலையில் காவிரி நீர்ப்பிடிப்பு பகுதியில் மழை பெய்து வரும் நிலையில் தற்போதைய நிலவரப்படி ஒகேனக்கல் காவிரி ஆற்றின் நீர்வரத்து 6,500 கன அடியில் இருந்து 8 ஆயிரம் கன அடியாக உயர்ந்து உள்ளது.

மெயின் அருவி, ஐந்தருவி, சினிபால்ஸ், ஐவர் பாணி உள்ளிட்ட அருவிகளில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டியது. சுற்றுலா பயணிகள் பாதுகாப்பு உடை அணிந்து பாறைகளுக்கு இடையே காவிரி ஆற்றில் உற்சாகமாக பரிசல் சவாரி மேற்கொண்டு காவிரி ஆற்றின் அழகை ரசித்தனர். மேலும் தொங்கு பாலத்தில் நின்று காவிரி ஆற்றில் விழும் தண்ணீரை ஆர்வமுடன் ரசித்து மகிழ்ந்தனர்.

# டாஸ்மாக் அலுவலகம் சோதனை விவகாரம் எந்த அடிப்படையில் திரைப்பட தயாரிப்பாளர், தொழிலதிபர் வீடுகளில் சோதனை? அமலாக்கத்துறைக்கு உயர் நீதிமன்றம் சரமாரி கேள்வி

சென்னை, ஜூன் 15

டாஸ்மாக்கில் முறைகேடு நடந்ததாக திரைப்பட தயாரிப்பாளர் ஆகாஷ் பாஸ்கரன், தொழிலதிபர் விக்ரம் ரவீந்திரன் ஆகியோரின் வீடு, அலுவலகங்களில் அமலாக்கத் துறையினர் சோதனை நடத்தினர். விக்ரம் ரவீந்திரனின் வீடுகள் மற்றும் அலுவலகத்திற்கு சீல் வைத்தனர். இந்நிலையில், அமலாக்கத் துறை நடவடிக்கைக்கு எதிராக ஆகாஷ் பாஸ்கரன் மற்றும் விக்ரம் ரவீந்திரன் ஆகியோர் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளனர்.

மனுவில், அமலாக்கத்துறை நடவடிக்கைக்கு தடை விதிக்கவேண்டுமெனவும், சீலை அகற்றவேண்டுமெனவும் கோரியிருந்தனர். இந்த மனு நீதிபதிகள் எம்.எஸ்.ரமேஷ், வி.லட்சுமி நாராயணன் அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது, ஆகாஷ் பாஸ்கரன் சார்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் விஜய்நாராயண், டாஸ்மாக் முறைகேட்டுக்கும் ஆகாஷ் பாஸ்கரனுக்கும் எந்த தொடர்பும் இல்லை. அவர் திரைப்பட தயாரிப்பாளர். அவரது 2 செல்போன் மற்றும் ஒரு லேப்டாப் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது என்று கூறினார்.

விக்ரம் ரவீந்திரன் சார்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர்கள் அபுடுகுமார் ராஜரத்தினம், விக்ரம் ரவீந்திரன் டாஸ்மாக் ஊழியரே இல்லாத நிலையில் சம்பந்தமே இல்லாமல் அவரது வீடு மற்றும் அலுவலகம் சீல் வைக்கப்பட்டுள்ளதாக கூறினர். இதைக்கேட்ட நீதிபதிகள், எந்த அடிப்படையில், விக்ரம் ரவீந்திரன் வீடு மற்றும் அலுவலகத்திற்கு சீல் வைக்கப்பட்டது. சீல் வைப்பதற்கு அமலாக்கத் துறைக்கு என்ன அதிகாரம் இருக்கிறது. சோதனை நடத்தலாம், ஆவணங்களை கைப்பற்றலாம். ஆனால் எப்படி சீல் வைக்க முடியும்.

அமலாக்கத் துறை சட்டத்தை பின்பற்ற வேண்டும் என்று நீதிபதிகள் கூறினர். இதற்கு பதிலளித்த அமலாக்கத்துறை சிறப்பு வழக்கறிஞர் என்.ரமேஷ், சோதனை நடத்த சென்ற போது வீடு மற்றும் அலுவலகம் பூட்டியிருந்த்து. அதன் காரணமாகவே சீல் வைக்கப்பட்டது. அமலாக்கத்துறையை தொடர்பு கொள்ளுமாறு நோட்டீஸ் ஒட்டப்பட்டது. ஆனால் ஒரு மாதம் தலைமறைவாக இருந்துவிட்டு தற்போது நீதிமன்றத்தை நாடியுள்ளனர் என தெரிவித்தார்.

அப்போது, குறுக்கிட்ட நீதிபதிகள், சோதனைக்கு சென்ற போது குறிப்பிட்ட நபர் இல்லையென்றால் போலீசார் உதவியுடன் கதவை உடைத்து சோதனை நடத்தியிருக்கலாமே என்று கேட்டனர். இதையடுத்து, எந்த அடிப்படையில், இந்த விவகாரத்தில் இருவரையும், விசாரிக்க முடிவு செய்தீர்கள். சீல் வைக்க என்ன அதிகாரம் இருக்கிறது என்பது தொடர்பாக அமலாக்கத் துறை பதிலளிக்குமாறு உத்தரவிட்டு, விசாரணையை வரும் 17ம் தேதிக்கு தள்ளிவைத்தனர்.

# ஓசூர் அருகே அரசு அதிகாரி வீட்டில் லஞ்ச ஒழிப்பு போலீசார் சோதனை




கிருஷ்ணகிரி, ஜூன் 15

ஓசூர் அருகே மூக்கண்டப்பள்ளியில் அரசு அதிகாரி கிருபானந்தம் வீட்டில் லஞ்ச ஒழிப்பு போலீசார் சோதனை மேற்கொண்டு வருகின்றனர்.

கிருஷ்ணகிரி மாவட்ட போதைப் பொருள் தடுப்பு பிரிவில் கிருபானந்தம் சிறப்பு உதவி ஆய்வாளராக உள்ளார்.

கிருபானந்தம் வீட்டில் நடத்திய சோதனையில் கோடிக்கணக்கில் பணம் பறிமுதல் என போலீசார் தகவல் தெரிவித்துள்ளனர்.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

15.6.2025

# குழந்தை தொழிலாளர் முறை எதிர்ப்பு நாள் உறுதிமொழி ஏற்பு



தூத்துக்குடி, ஜூன் 15

ஒவ்வொரு வருடமும் ஜூன் 12ம்தேதி "குழந்தை தொழிலாளர் முறை எதிர்ப்பு நாளாக" அனுசரிக்கப்பட்டு வருகிறது. அதன்படி குழந்தை தொழிலாளர் முறை எதிர்ப்பு நாளை முன்னிட்டு நேற்று (12.6.2025) தூத்துக்குடி மாவட்ட எஸ்.பி. அலுவலகத்தில் எஸ்.பி. ஆல்பர்ட் ஜான் தலைமையில், தூத்துக்குடி தலைமையிடத்து ஏ.டி.எஸ்.பி. தீபு உட்பட காவல்துறையினர்கள் மற்றும் காவல் அமைச்சுப்பணியாளர்கள் கலந்து கொண்டு "குழந்தை தொழிலாளர் முறை எதிர்ப்பு நாள்" உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

அப்போது அவர்கள் அனைவரும், "இந்திய அரசியலமைப்பு விதிகளின்படி கல்விபெறுவதுகுழந்தைகளின்அடிப்படை உரிமை என்பதால் 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளை ஒருபோதும் எந்தவித பணிகளிலும் ஈடுபடுத்த மாட்டேன் எனவும், அவர்கள் பள்ளிக்கு செல்வதை ஊக்குவிப்பேன் எனவும், குழந்தைத் தொழிலாளர் முறையினை முற்றிலுமாக அகற்றிட சமுதாயத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்துவேன் என்றும், தமிழ்நாட்டை குழந்தைத் தொழிலாளர் அற்ற மாநிலமாக மாற்றுவதற்கு என்னால் இயன்றவரை பாடுபடுவேன் எனவும் உளமார உறுதி ஏற்கிறேன்" என்று கூறி உறுதிமொழி எடுத்தனர். நெல்லை: திருநெல்வேலி மாநகர போலீஸ் கமிஷனர் சந்தோஷ் ஹாதிமணி தலைமையில், போலீஸ் துணை கமிஷனர்கள் கீதா (மேற்கு), வினோத்சாந்தாராம் (கிழக்கு), விஜயகுமார் (தலைமையிடம்), காவல் அதிகாரிகள், அலுவலக பணியாளர்கள் மற்றும் காவலர்கள் அனைவரும் ஒன்றிணைந்து, மாநகர போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில் குழந்தை தொழிலாளர் முறையினை அகற்றுவதற்கான உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

# நடப்பு கல்வியாண்டுக்கான கால அட்டவணை வெளியீடு; அனைத்து சனிக்கிழமைகளிலும் விடுமுறை




சென்னை, ஜூன் 15

நடப்பு கல்வியாண்டுக்கான கால அட்டவணையை பள்ளிக்கல்வித்துறை வெளியிட்டுள்ளது. மொத்தம் 210 நாட்கள் வேலை நாட்களாகவும், அனைத்து சனிக்கிழமையும் விடுமுறை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு கல்வியாண்டின் தொடக்கத்திலும் அந்த ஆண்டுக்கான கால அட்டவணையை பள்ளிக் கல்வித்துறை வெளியிடும். அதாவது அந்த ஆண்டில் எவ்வளவு நாள் வேலை நாட்கள்?, காலாண்டு, அரையாண்டு, ஆண்டு இறுதி தேர்வுகள் எப்போது நடத்தப்படும்? என்பது போன்ற தகவல்கள் இடம்பெற்று இருக்கும். அந்த வகையில் நடப்பு கல்வியாண்டுக்கான (202526) நாட்காட்டியை பள்ளி கல்வித்துறை வெளியிட்டது. அதில் மொத்தம் 210 வேலை நாட்களாக சொல்லப்பட்டு இருக்கிறது. கல்வியாண்டின் இறுதி வேலை நாள் அடுத்த ஆண்டு (2026) ஏப்ரல் 24 ந் தேதி ஆகும். தேர்வுகளை பொறுத்தவரையில், முதல் இடைபருவத் தேர்வு ஜூலை 16ந் தேதி தொடங்க உள்ளது. காலாண்டு தேர்வு செப்டம்பர் 18ந்தேதி தொடங்கி 26 ந்தேதி வரையில் நடக்கிறது. காலாண்டு விடுமுறை 9 நாட்கள் விடப்பட்டு அக்டோபர் 6ந்தேதி பள்ளிகள் திறக்கப்படும் என கூறப்பட்டுள்ளது.

அதேபோல் அரையாண்டு தேர்வு டிசம்பர் 15 முதல் 23ந்தேதி வரை நடைபெற உள்ளது. அரையாண்டு விடுமுறை 12 நாட்கள் விடப்பட்டு அடுத்த ஆண்டு ஜனவரி 5ந்தேதி பள்ளிகள் திறக்கப்படுகிறது. ஆண்டு இறுதி தேர்வு ஏப்ரல் 10ந்தேதி தொடங்கி 24ந்தேதியுடன் முடிவடைந்து அதற்கு மறுநாளில் இருந்து கோடை விடுமுறை தொடங்கும் என தெரிவிக்கப்பட்டு உள்ளது.

இது தவிர தீபாவளிக்கு 3 நாட்கள், பொங்கல் பண்டிகைக்கு 5 நாட்கள், கல்வியாண்டின் அனைத்து சனிக்கிழமைகளிலும் விடுமுறை என அறிவிக்கப்பட்டுள்ளது. வழக்கமாக எஸ்.எஸ்.எல்.சி., பிளஸ்1, பிளஸ்2 பொதுத் தேர்வு எப்போது தொடங்கும் என்ற தகவலும் கால அட்டவணையில் இடம்பெறும்.

கடந்த ஆண்டில் இதுகுறித்து தெரிவிக்கப்படாத நிலையில் இந்த ஆண்டும் அதுகுறித்து எந்த தகவலும் இல்லை. பள்ளிகள் இந்த மாதிரி கல்வி அட்டவணையை பயன்படுத்தி பள்ளிகளுக்கு ஏற்றவாறு கால அட்டவணையை தயாரித்து கொள்ளலாம் என்றும், கால அட்டவணை குறித்த கருத்துகள் ஆலோசனைகளை msectndse@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பலாம் என்றும் பள்ளி கல்வித்துறை அறிவித்துள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் (15.6.2025)

**மேஷம்:** பொருளாதார வளர்ச்சி காணப்படும். பயணங்களில் சாதகமான பலன். குடும்பத்தில் நல்ல செய்தி கிடைக்கும். பரிகாரம்: வெள்ளை பூக்கள் வழிபாடு.

**ரிஷபம்:** தொழிலில் புதிய வாய்ப்புகள். வருமானம் திருப்திகரமாக இருக்கும். நீண்ட நாள் ஆசைகள் நிறைவேறும். பரிகாரம்: விநாயகர் வழிபாடு.

**மிதுனம்:** நண்பர்களிடம் நன்மை, உறவினர் மூலம் அனுபவம். பழைய கடன்கள் சுமையாக இருக்கலாம். பரிகாரம்: துர்கை அம்மனை வணங்குங்கள்.

**கடகம்:** வீடு, வாகனம் சார்ந்த காரியங்களில் அலைச்சல் இருக்கும். பணியில் ஒற்றுமை தேவைப்படும். பரிகாரம்: சந்திரன் வழிபாடு.

**சிம்மம்:** மதிப்பும் மரியாதையும் உயரும். அரசாங்கம் சார்ந்த முயற்சிகளில் சாதனை. வர்த்தக வளர்ச்சி. பரிகாரம்: சூரிய பகவானை வணங்குங்கள்.

**கன்னி:** குடும்ப உறவுகளில் மகிழ்ச்சி. செயல்களில் தாமதம் ஏற்படலாம். கவனத்துடன் செயல்படுங்கள். பரிகாரம்: வியாழ பகவானை வழிபடுங்கள்.

**துலாம்:** மாணவர்களுக்கு முன்னேற்றம். புதிய ஒப்பந்தங்களில் கவனம் தேவை. நீதி வழி விஷயங்களில் சாதகம். பரிகாரம்: நவகிரகங்களில் சுக்கிர பகவானை வழிபடவும்.

**விருச்சிகம்:** பணியாளர்களுக்கு பதவி உயர்வு வாய்ப்பு. பழைய பிரச்சனைகள் தீரும். மனநிலை தெளிவாகும். பரிகாரம்: சனீஸ்வர பகவானை வணங்குங்கள்.

**தனுசு:** நண்பர்களிடம் அனுகூலம். செலவுகள்திறனாகும். யணங்களில் நன்மை. பரிகாரம்: குரு பகவானை வழிபடவும்.

**மகரம்:** தொழிலில் வளர்ச்சி. திட்டமிட்ட செலவுகள் உண்டு. குடும்பத்தில் சந்தோஷம் அதிகரிக்கும். பரிகாரம்: நரசிம்மர் வழிபாடு.

**கும்பம்:** எதிர்பாராத பணவரவு. சொத்து விவகாரங்களில் சாதகமில்லாத சூழ்நிலை. மனஅமைதி தேவை. பரிகாரம்: ஹனுமான் வழிபாடு.

**மீனம்:** மாணவர்களுக்கு வெற்றி. குடும்பத்தில் ஏதேனும் பிரச்சனை தீரும். மனநிறைவு அதிகம். பரிகாரம்: துர்கை வழிபாடு.

# சென்னையில் நுகர்வோர் பாதுகாப்பு கருத்துப்பட்டறை தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் பங்கேற்பு

சென்னை, ஜூன் 15

தென்னிந்திய மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கான நுகர்வோர் பாதுகாப்பு குறித்த ஒருநாள் கருத்துப்பட்டறை, சென்னையில் இன்று நடைபெற்றது. இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது;

"மத்திய அரசின் நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகத்தின் கீழ் உள்ள நுகர்வோர் விவகாரங்கள் துறையின் மூலம் தென்னிந்திய மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கான (தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, ஆந்திரா, தெலுங்கானா, புதுச்சேரி, அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகள், லட்சத்தீவுகள்) நுகர்வோர் பாதுகாப்பு குறித்த ஒருநாள் கருத்துப்பட்டறை, சென்னையில் இன்று நடைபெற்றது.

மத்திய அரசின் நுகர்வோர் விவகாரங்கள் துறை செயலாளர், இணைச் செயலாளர் உள்ளிட்ட அலுவலர்கள், தென்னிந்திய மாநிலங்களின் நுகர்வோர் விவகாரங்கள் துறையின் முதன்மைச் செயலாளர்கள், மாநில மற்றும் மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையங்களின் தலைவர்கள்/ உறுப்பினர்கள், முக்கிய தன்னார்வ நுகர்வோர் அமைப்புகள் மற்றும் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் பிற தொடர்புடைய பிரச்சனைகள் குறித்து பங்குதாரர்களிடையே அறிவுப்பகிர்வை மேம்படுத்துவதே கருத்துப்பட்டறையின் முக்கிய நோக்கமாக அமைந்தது. இஜாக்ரிதி எனும் தொழில்நுட்ப தளத்தின் வாயிலாக வீடு மனை விற்பனை, காப்பீட்டுத் துறை, மருத்துவ அலட்சியம் ஆகியவற்றைச் சார்ந்த நுகர்வோர் தொடர்புடைய குறைதீர்க்கும் முறைகளை மேம்படுத்துவதற்கான சிறந்த நடைமுறைகள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.

மேலும், தொழில், வணிகம் மற்றும் வர்த்தகம் தொடர்பான ஆய்வு, சட்டமுறை எடையளவு, தர மதிப்பீடு ஆகியவைகள் குறித்தும் தேசிய ஆய்வு இல்லத்தின் தொழில்நுட்பக் குழுவால் ஆலோசனைகள் வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் மத்திய அரசின் கூடுதல் செயலாளர்கள் மற்றும் இணைச் செயலாளர்கள் பங்கேற்றனர். இந்த கருத்துப்பட்டறை, பங்குதாரர்களிடையே அறிவுப் பகிர்வு மற்றும் திறன் மேம்பாட்டிற்கான ஒரு தளமாக செயல்பட்டு, தென்னிந்திய மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் வலுவான நுகர்வோர் பாதுகாப்பு சூழலை உறுதி செய்தது. இக்கருத்துப் பட்டறை சிறப்பான முறையில் நடைபெற தேவையான அனைத்து ஏற்பாடுகளும் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை மூலம் மேற்கொள்ளப்பட்டது." இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மாவட்ட ஆயுதப்படை வளாகத்தில் புதிய காவலர் உணவு விடுதி திறப்பு: எஸ்.பி. விளக்கு ஏற்றினார்



தூத்துக்குடி ஜூன் 15

தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி நகர உட்கோட்டம், தெற்கு காவல்நிலைய எல்லைக்குட்பட்ட மாவட்ட ஆயுதப்படை வளாகத்தில் நேற்று பொதுமக்கள் மற்றும் காவல்துறையினருக்கு பயன்படும் வகையில் மலிவு விலையில் காலை, மதியம் மற்றும் இரவு (மூன்று வேளைகள்) சுவையுடன் கூடிய சைவ மற்றும் அசைவ உணவு விடுதியை நேற்று மாவட்ட எஸ்.பி. ஆல்பர்ட்ஜான் விளக்கு ஏற்றி திறந்து வைத்தார். இந்த உணவு விடுதி பொதுமக்கள் மற்றும் காவலர்களுக்கு பயன்படும் வகையில் திறக்கப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து மாவட்ட ஆயுதப் படை வளாகத்தின் முன்பு எஸ்.பி. மரக்கன்று நட்டார்.

இந்த நிகழ்ச்சியில் தூத்துக்குடி நகர உட்கோட்ட ஏ.எஸ்.பி. மதன், ஆயுதப் படை இன்ஸ்பெக்டர் சுனைமுருகன், ஆயுதப்படை காவலர்கள் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டனர்.

# படை தலைவன் சினிமா விமர்சனம்




யானை பயிற்றுவிப்பாளரான சண்முக பாண்டியன், ஒரு யானையை குட்டியிலிருந்து வளர்த்து வருகிறார். 'மானியன்' என்று பெயர் சூட்டப்பட்ட அந்த யானையை தன் பிள்ளையாக பாவித்து வளர்க்கிறார். இதற்கிடையில் ஊருக்குள் புதிதாக வரும் ஒரு கூட்டம், யானையை திருடிக் கொண்டு காட்டுக்குள் சென்று மறைகிறார்கள். இதற்கு சண்முக பாண்டியன் உறவினரும் துணை போகிறார். யானையை காணாமல் தவிக்கும் சண்முக பாண்டியன், தனது நண்பர்களுடன் யானையை தேடி காட்டுக்குள் செல்கிறார். இந்த பயணத்தில் பல்வேறு இடையூறுகளையும், சவால்களையும் அவர் எதிர்கொள்கிறார்.

அதேவேளை காட்டுக்குள் வன தேவதையை வழிபடும் மக்களை ஒரு கும்பல் மிரட்டி அடிபணிய வைத்திருப்பதை அறிகிறார். சுதந்திரம் இல்லாமல் துயரோடு வாழும் அந்த மக்களுக்கு அவர் விடுதலை பெற்று தந்தாரா? மகனாக கருதி வளர்த்த யானையை கண்டுபிடித்தாரா? கொள்ளை கூட்டம் யானையை திருடி சென்றது ஏன்? என்ற பல்வேறு கேள்விகளுக்கு விடை சொல்கிறது மீதி கதை.

கோபம், ஆக்ரோஷம், அதிரடியில் விஜயகாந்தை அப்படியே உரித்து வைத்தார் போல, களமிறங்கி அசத்தியிருக்கிறார் சண்முக பாண்டியன். முந்தைய படங்களை ஒப்பிடும்போது அவரது நடிப்பு மெருகேறி இருக்கிறது. யானையுடனான பாச காட்சிகள் புல்லரிக்க வைக்கிறது.

யாமினி சந்தர் அழகான கதாநாயகியாக மனதில் இடம் பெறுகிறார். இன்னும் அவரை பயன்படுத்தி இருக்கலாம். வில்லனாக வரும் கருடன் ராம், மிரட்டல் நடிப்பால் கவனிக்க வைக்கிறார். ரிஷி ரித்விக் உள்ளிட்டோரின் நடிப்பும் பேச வைக்கிறது. முனிஷ்காந்த், வெங்கடேஷ், அருள் தாஸ், ஸ்ரீஜித் ரவி உள்ளிட்டோரம் கொடுத்த வேலையை சிறப்பாக செய்திருக்கிறார்கள்.

ஏ ஐ தொழில்நுட்பத்தில் இடம்பெறும் விஜயகாந்த் ஓரிரு காட்சிகளே வந்தாலும் சிலிர்க்க வைக்கிறார். அவருடன் வரும் யோகி பஞ்ச் வசனங்கள் பேசி 'ரமணா' படத்தை நினைவூட்டுகிறார்.

எஸ் ஆர் சதீஷ்குமாரின் ஒளிப்பதிவு படத்துக்கு உயிரோட்டமாக அமைந்துள்ளது யானைகள் வரும் காட்சிகள், அடர்ந்த காடுகளில் நடக்கும் சண்டைக் காட்சிகளில் அவரது உழைப்பு தெரிகிறது. இளையராஜாவின் இசை வருடுகிறது. பின்னணி இசையும் சுகம். பரபரப்பான திரைக்கதை பலம். பல இடங்களில் லாஜிக் மீறல்கள் எட்டிப் பார்ப்பது பலவீனம். ஏற்கனவே பழக்கப்பட்ட கதைக்களம் என்றாலும், அதில் புதுமையான விஷயங்களை புகுத்தி, பரபரப்பும், விறுவிறுப்பான படைப்பை கொடுத்து கவனம் ஈர்த்திருக்கிறார், இயக்குனர் யு.அன்பு. கிளைமேக்ஸ் சண்டை காட்சி அசர வைக்கிறது.

# டிஎன்பிஎல்: சேலத்திற்கு 178 ரன்கள் இலக்கு நிர்ணயித்த திருப்பூர்



நடப்பு தமிழ்நாடு பிரீமியர் லீக் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் நடைபெற்று வருகிறது. அதில் சேலத்தில் இன்று நடைபெற்றுவரும் 9வது லீக் ஆட்டத்தில் சேலம் ஸ்பார்டன்ஸ், ஐடிரீம் திருப்பூர் தமிழன்ஸ் அணிகள் மோதி வருகின்றன.

இதில், டாஸ் வென்ற சேலம் பந்து வீச்சை தேர்வு செய்தது. இதையடுத்து களமிறங்கிய திருப்பூர் 20 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்டுகள் இழப்பிற்கு 177 ரன்கள் குவித்தது. அந்த அணியின் தொடக்க வீரர் துஷார் ரஹ்ஜா 28 பந்துகளில் 5 சிக்சர்கள், 8 பவுண்டரிகள் உள்பட 74 ரன்கள் குவித்தார். சேலம் தரப்பில் அந்த அணியின் பொய்யாமொழி அதிகபட்சமாக 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார். இதையடுத்து 178 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் சேலம் விளையாடி வருகிறது.

# கேட்ச் பிடிக்க முயன்றபோது ஸ்டீவ் ஸ்மித்திற்கு காயம்



ஆஸ்திரேலியா, தென் ஆப்பிரிக்கா இடையே உலக டெஸ்ட் கிரிக்கெட் சாம்பியன்ஷிப்இறுதிப்போட்டிலண்டன்லார்ட்ஸ்மைதானத்தில்நடைபெற்று வருகிறது. இதில், 282 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் தென் ஆப்பிரிக்கா விளையாடி வருகிறது. தற்போதைய நிலவரப்படி, தென் ஆப்பிரிக்கா 2 விக்கெட்டுகள் இழப்பிற்கு 120 ரன்கள் எடுத்துள்ளது. தென் ஆப்பிக்காவெற்றிபெறஇன்னும்162ரன்கள்எடுக்கவேண்டும். ஆஸ்திரேலியா வெற்றிபெற இன்னும் 8 விக்கெட்டுகளை வீழ்த்த வேண்டும். இந்நிலையில், இப்போட்டியின்போது ஆஸ்திரேலிய வீரர் ஸ்டீவ் ஸ்மித்திற்கு கையில் காயம் ஏற்பட்டது. 19.2 ஓவரில் ஸ்டார்க் வீசிய பந்தை தென் ஆப்பிக்க கேப்டன் பவுமா விளாச முற்பட்டார். அப்போது, அந்த பந்து ஸ்லிப்பில் கேட்ச் நோக்கி சென்றது. ஸ்லிப்பாக ஸ்டீவ் ஸ்மித் செயல்பட்ட நிலையில் அவர் அந்த கேட்சை பிடிக்க முயன்றார். ஆனால், பந்து ஸ்மித்தின் வலது கையில் வேகமாக பட்டு கீழே விழுந்தது. இதில், ஸ்மித்தின் வலது கையில் காயம் ஏற்பட்டது. இதையடுத்து, அவர் மைதானத்தில் இருந்து வெளியேறினார். அவருக்கு பதிலாக மாற்று வீரராக சாம் கொன்ஸ்டாஸ் களத்திற்கு வந்துள்ளார். கையில் ஏற்பட்ட காயம் தொடர்பாக ஸ்மித் மருத்துவமனைக்கு சென்றுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

# அண்ணாமலையார் கோயிலில் இளையராஜா சாமி தரிசனம்



1976ம் ஆண்டு தேவராஜ்மோகன் இயக்கத்தில் வெளியான 'அன்னக்கிளி' படத்தின் மூலம் அறிமுகமானவர் இசைஞானி இளையராஜா. தமிழ் சினிமாவின் முன்னணி இசையமைப்பாளரான இளையராஜா, சினிமாவில் 1,500 படங்களுக்கு மேல் இசையமைத்து சாதனை ராஜாவாக திகழ்ந்து வருகிறார். இசைக்கு அவர் அளித்த பங்களிப்பை போற்றும் வகையில் பல்வேறு விருதுகளை அளித்த மத்திய அரசு மாநிலங்களவை உறுப்பினராகவும் அவரை நியமனம் செய்துள்ளது. சமீபத்தில் லண்டனில் 'வேலியண்ட்' சிம்பொனியை அரங்கேற்றம் செய்து இளையராஜா சாதனை படைத்துள்ளார்.

இந்நிலையில், திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயிலுக்கு இன்று காலை இசைஞானி இளையராஜா வருகை தந்தார் இதையடுத்து சம்பந்த விநாயகர், அண்ணாமலையார், மூலவர், உண்ணாமலை அம்மன், நவகிரகம் உள்ளிட்ட சன்னதிகளை தரிசனம் செய்தார். இதைத் தொடர்ந்து இசைஞானி இளையராஜாவிற்கு திருக்கோயில் நிர்வாகம் சார்பாக சுவாமி பிரசாதம் வழங்கப்பட்டது.

# டிஎன்பிஎல்: மதுரைக்கு எதிராக டாஸ் வென்ற திண்டுக்கல் அணி பந்துவீச்சு தேர்வு




டிஎன்பிஎல் கிரிக்கெட் போட்டிகள் சேலத்தில் நடைபெற்று வருகிறது. இந்த தொடரில் 11வது ஆட்டத்தில் மதுரை திண்டுக்கல் அணிகள் இன்று மோதி வருகின்றன. இந்த ஆட்டத்துக்கான டாஸ் போடப்பட்டது. இதில் திண்டுக்கல் அணி டாஸ் வென்று பந்துவீச்சை தேர்வுசெய்துள்ளது. அதன்படி, மதுரை அணி முதலில் பேட்டிங் செய்து வருகிறது.

# ஜி.வி.பிரகாஷ் பிறந்தநாள்: "இம்மோர்டல்" படத்தின் புதிய போஸ்டர் வெளியீடு




தமிழ் சினிமாவில் முன்னணி இசையமைப்பாளராகவும் நடிகராகவும் வலம் வருபவர் ஜி.வி. பிரகாஷ் குமார். இவரது நடிப்பில் சமீபத்தில் 'கிங்ஸ்டன்' படம் வெளியானது. கமல்பிரகாஷ் எழுதி இயக்கிய இப்படத்தில் திவ்யபாரதி கதாநாயகியாக நடித்திருந்தார். இப்படம் கலவையான விமர்சனங்களையே பெற்றது. அதனை தொடர்ந்து 'இடிமுழக்கம்' என்ற படத்தில் நடித்துள்ளார். அப்படம் விரைவில் வெளியாக உள்ளது. அறிமுக இயக்குனர் மாரியப்பன் சின்னா இயக்கும் இப்படத்தில் கதாநாயகியாக கயாடு லோஹர் நடிக்கிறார். ஏகே பிலிம் பேக்டரி நிறுவனம் தயாரிக்க உள்ள இப்படத்திற்கு 'இம்மோர்டல்' எனப்பெயரிடப்பட்டுள்ளது. இந்தப் படத்துக்கு சாம் சி.எஸ். இசையமைக்கிறார். இந்நிலையில், மாரியப்பன் சின்னா புதிய போஸ்டரை பகிர்ந்து "திறமையின் ஆற்றல் நிலையமான ஜி.வி.பிரகாஷுக்கு பிறந்தநாள் வாழ்த்துகள். மறக்க முடியாத இசைத்துணுக்குகளும் குறிப்பிடத்தக்க நடிப்பும் காத்திருக்கின்றன. 'இம்மோர்டல்' படக்குழு சார்பாக வாழ்த்துகள்" என கூறியுள்ளார்.



# டி.என்.பி.எல். கிரிக்கெட்: கோவை அணியை வீழ்த்தி 'ஹாட்ரிக்' வெற்றி பெற்ற சேப்பாக் சூப்பர் கில்லீஸ்

8 அணிகள் இடையிலான 9வது டி.என்.பி.எல். டி20 கிரிக்கெட் தொடர் கோவையில் கடந்த 5ந் தேதி தொடங்கியது. இதில் ஒவ்வொரு அணியும், மற்ற அணியுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் சுற்று முடிவில் முதல் 4 இடங்களை பிடிக்கும் அணிகள் பிளேஆப் சுற்றுக்கு முன்னேறும். இந்த தொடரின் முதற்கட்ட லீக் ஆட்டங்கள் கோவையில் நடந்து முடிந்தன. இந்நிலையில், தொடரின் 2வது கட்ட லீக் ஆட்டங்கள் சேலத்தில் நடந்து வருகிறது. இதில் இன்று இரண்டு லீக் ஆட்டங்கள் நடக்கின்றன. அதன்படி மாலை 3.15 மணிக்கு தொடங்கிய 10வது லீக்கில் முன்னாள் சாம்பியனான பாபா அபராஜித் தலைமையிலான சேப்பாக் சூப்பர் கில்லீஸ் அணி, ஷாருக்கான் தலைமையிலான கோவை கிங்ஸ் அணியுடம் மோதியது. இந்த ஆட்டத்தில் டாஸ் வென்ற சேப்பாக் சூப்பர் கில்லீஸ் அணி பந்துவீச்சை தேர்வு செய்தது. இதன்படி முதலில் பேட்டிங் செய்த லைகா கோவை கிங்ஸ் அணி 19.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 144 ரன்கள் எடுத்தது. அந்த அணியில் அதிகபட்சமாக ஜித்தேந்திரா 42 ரன்கள் எடுத்தார். தொடர்ந்து 145 ரன்கள் என்ற இலக்கை நோக்கி விளையாடிய சேப்பாக் சூப்பர் கில்லீஸ் அணி, 15.1 ஓவர்கள் முடிவில் 2 விக்கெட் இழப்பிற்கு 146 ரன்கள் எடுத்து 8 விக்கெட் வித்தி யாசத்தில் வெற்றி பெற்றது. தனது முதல் இரு ஆட்டங்களில் திருப்பூர், நெல்லை ராயல் கிங்சை வீழ்த்திய சேப்பாக் சூப்பர் கில்லீஸ் அணி, கோவையை வீழ்த்தி 'ஹாட்ரிக்' பெற்றியை பதிவு செய்துள்ளது.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.